1994 ஜனவரி 3]

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாகச் சென்னை மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், வள்ளுவர் கோட்டம் முதலிய இடங்களில் வாரந்தோறும் திருக்குறள் வகுப்பு நடத்தி வருகிறார். திருக்குறள் நெறிபரப்பு மையம் மூலமாகத் தமிழகக் கோயில்களில் வள்ளுவர் அறிவகம் தொடங்க தற்போது திட்டம் ஏதுமில்லை.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் திருக்குறளினுடைய வாசகங்களைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ளுகின்ற அளவிலே எழுதி வைக்கின்றபோது, அதைப்போல திருக்கோயில்களிலே அங்கேயிருக்கின்ற கல்தூண்களிலே ஒவ்வொரு திருக்குறள் வாசகங்களை வைக்கின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட ஆலயங்களிலிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டு அறநிலையத் துறை மூலமாகக் கோரிக்கை வருமானால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 135, திரு. ஆர். டி. அரங்கநாதன்; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

135–

விருத்தாசலம் நகராட்சியில் புதிய குடியிருப்புப் பகுதிகளுக்குப் போதிய வசதி செய்து கொடுத்தல்

9495*–திரு. ஆர்.டி. அரங்கநாதன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு பல ஆண்டுகளாக நகராட்சி நிர்வாகத்தின் கீழ் வரி வசூல் (வீட்டு வரி) செய்யப்படாமலும், அப்பகுதி மக்களுக்கு நகராட்சி நிர்வாகம் மூலம் போதிய வசதிகள் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அதுபோன்ற குடியிருப்பு பகுதிகளுக்கு நகராட்சி நிர்வாகத்தின் கீழ் போதிய வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மாணிக்கவாசக நகர், பழமலை நகர், விருதாம்பிகை நகர், சக்தி நகர் போன்றவைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. புறம்போக்கு மற்றும் நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள ஆக்கிரமிப்பு கட்டிடங்களுக்கு அவ்வப்போது வரி விதிக்கப்பட்டு வருகிறது. மாணிக்கவாசக நகர் பகுதி குடியிருப்பு கட்டிடங்கள் கோயில் நிலமாக இருப்பதால் கோயில் நிர்வாக அதிகாரியிடமிருந்து ஆட்சேட்பனை இல்லை என்ற சான்று பெற்றுக் கொடுத்தால் வரி விதிக்கப்படும் மேலும் ஆண்டு வாடகை மதிப்பு ரூ.180/--க்கு குறைவாக உள்ள வீட்டிற்கு சொத்து வரி விதிப்பதில்லை. விருத்தாசலம் நகராட்சி பகுதியில் புதிய குடியிருப்புகள், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்றும், அனுமதி பெறாமலும் அமைக்கப்பட்டுள்ளன. அனுமதி பெற்ற மனைப்பிரிவுகளிலும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களையும் சாலை வசதி, தெரு விளக்கு முதலியவை நகராட்சிக்கு ஒப்படைக்காமல் உள்ளன. மேற்படி மனைப்பிரிவுதாரர்களுக்கும், அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவுதாரர் களுக்கும் உரிய அடிப்படை வசதிகள் செய்து நகராட்சி வசம் ஒப்படைக்கும்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர்.டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாகத்தால் வரி வசூல் செய்யப்படும் என்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில்--விருத்தாசலம் நகராட்சி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே வளர்ந்து வருகின்ற நகராட்சியாக இருக்கின்ற காரணத்தினால் அந்த நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு இடங்களில் இன்றைக்குப் பொது மக்கள் குடியிருப்புக்காக வீட்டுமனை பிடித்து அந்தப் பகுதிகளிலே வீடுகள் கட்டிக் குடியிருந்து வருகின்ற ஒரு சூழ்நிலையில்--குறிப்பாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லிய மாணிக்கவாசக நகர் மற்றும் பழமலை நகர் போன்ற அந்தப் பகுதிகளுக்கெல்லாம் இன்றைக்கு ஆலயத்தினுடைய அனுமதி தருவதற்கு அவர்கள் முன் வந்தாலும் அதேபோல விருத்தாசலம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட தந்தை பெரியார் நகர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், அவர்கள் நகர் இப்படிப்பட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 12 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வருகின்ற குடியிருப்பு பகுதிகளுக்கு இன்னும் நகராட்சியில்–இவர்கள் நகராட்சிக்கு வரி

1994 ஜனவரி 3]

செலுத்தி கொடுத்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலும் இன்றைக்கு அவர்களுக்குப் போதிய அத்தியாவசிய வசதிகள் இன்னும் செய்து தரப்படாமல் இருக்கிறது. நகராட்சி நிர்வாகத்திலே அவர்களுக்குத் தேவையான வசதிகளைக் கேட்கின்ற நேரத்திலே அவர்களுக்கு இன்னும் அங்கே போதிய வசதிகள் செய்து தருவதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதைப் பார்த்து அப்பகுதி மக்கள் மிகவும் வேதனையோடு அங்கே தெரிவிக்கின்ற சூழ்நிலையில் அவர்களுக்கு, பொது மக்கள் நன்மை கருதி, அப்பகுதி குடியிருப்புப், பகுதிகளுக்கு அரசின் மூலமாகப் போதிய அத்தியாவசிய வசதிகள் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணை பிறப்பிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10.55*

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன எம்.ஜிஆர். நகர்ப்பகுதி மற்றும் அவர் குறிப்பிட்ட பகுதிகளெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளில் உள்ளடங்கி இருக்கின்றனவா அல்லது அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவுகளில் உள்ளடங்கி இருக்கின்றனவா என்பன பற்றி குறிப்பு என்னிடத்திலே இல்லை. பொதுவாகவே, டைரக்டரேட் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷனிலே இது சம்பந்தமாக தனிப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன. அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளாக அங்கே இருக்கின்றன எனும் பட்சத்தில், வீடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; கட்டிடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்கள் மொத்தத்திலே மூன்றில் இரண்டு பங்கு மக்கள், இந்தக் கோரிக்கையை வைப்பார்கள் என்று சொன்னால், ஒரு மனுவின் மூலமாக சம்பந்தப்பட்ட நகராட்சிக்கு அந்தப் பகுதியிலே இருக்கிற சாலைகளையும், பொது இடங்களையும் அவர்கள் ஒப்படைப்பார்கள் என்று சொன்னால், அரசு உறுதியாக அந்தக் கோரிக்கையை ஏற்று, விரைவிலே அதற்கான அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என உறுதிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 136, திரு. சிங்கை கோவிந்தராசு ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.